(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 307.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2013 ஒற்றோபர் 24, வியாழக்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2595/ '12

1.

கௌரவ சஜித் பிரேமதாச,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உள்ளூராட்சித் தேர்தல்கள் சட்டங்களுக்கு அமைய அத்தேர்தல்களுக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற வேட்பாளர் பட்டியல்களில் பெண்களுக்கான ஆகக் குறைந்த வேட்பாளர்களின் வீதமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், பெண் வேட்பாளர்களுக்காக மேற்படி வேட்பாளர் பட்டியல்களில் குறிப்பிடத்தக்களவு வீதம் ஒதுக்கப்படல் வேண்டும் என்பதை அவர் ஏற்றுக் கொள்கின்றாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வாறு ஒதுக்கப்பட வேண்டிய வீதம் யாது என்பதையும்;

(iv) இன்றைய பெண்களின் சனத்தொகை வீதத்திற்கு ஒப்பீட்டளவில் பெண்களுக்கு ஒதுக்கப்படுகின்ற மேற்படி வேட்பாளர் வீதம் போதுமானதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3014/ '12

2.

கௌரவ புத்திக பத்திரண,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாடு பூராவும் அமைந்துள்ள சமுதாய நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டுக் கருத்திட்டங்களில் சேவையாற்றிய பெரும் தொகையான ஊழியர்களின் தொழில் இழக்கச் செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) நீக்கப்பட்ட மேற்படி ஊழியர்களுக்கு புதிய நிறுவனமொன்றில் தொழில் பெற்றுத் தருவதாக வாக்குறுதியளிக்கப்பட்ட போதிலும் இற்றை வரை தொழில் வழங்கப்படவில்லை என்பதையும்;

(iii) நீக்கப்பட்ட ஊழியர்களுக்கு இற்றை வரை இழப்பீட்டுப் பணம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் வழங்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக புதிய நிறுவனமொன்றை தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டங்கள் தொடர்பில் காணப்பட்ட நிறுவனங்களை மூடிவிட்டு புதிய நிறுவன முறைமையொன்றை உருவாக்குவதற்கான நோக்கம் யாதென்பதையும்;

(iii) நீக்கப்பட்ட ஊழியர்களுக்கு மேலே (அ) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகளை துரிதமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3110/ '12

3\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் பங்குதாரர்களையும்;

(ii) இக் கருத்திட்டம் கேள்விப்பத்திரம் கோரல் அடிப்படையில் வழங்கப்பட்டதாவென்பதையும்;

(iii) அவ்வாறாயின், கேள்விப் பத்திரதாரர்களின் பெயர்களையும் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட தொகைகளையும்;

(iv) இன்றுவரை இத்திட்டத்திற்கு ஏற்பட்ட மொத்தச் செலவையும்;

(v) மின்னுற்பத்தி நிலையத்தின் உத்தரவாத காலத்தையும்;

(vi) 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதத்திலிருந்து இன்றுவரை நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையம் இயங்காத நாட்களின் எண்ணிக்கையையும்;

(vii) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் இயங்காததனால் இலங்கை மின்சார சபைக்கு ஏற்பட்ட நட்டத்தையும்;

(viii) ஏதாவது இயந்திரக் கோளாறுகள் ஏற்படின், அதனை நிவர்த்தி செய்வதற்கான உதிரிப்பாகங்கள் எங்கே வைக்கப்பட்டுள்ளனவென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3360/ '12

4\.

கௌரவ பி. ஹரிசன்,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொது நிருவாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் அரசாங்க வாகனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவை என்பதையும்

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் உள்ள வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் சொந்த வாகனங்களை வேறுபடுத்தி இனம் காண்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இது தொடர்பில் விளக்கமளிப்பாரா என்பதையும்;

(iii) அமைச்சுக்கும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் சொந்தமான அரசாங்க வாகனங்களில் அரச இலச்சினையுடன் குறித்த நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3693/ '13

5.

கௌரவ அனுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 ஆம் ஆண்டிலிருந்து 2013.02.28 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பொலிஸினால் கைது செய்யப்பட்டபோது உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அவ்வாறு உயிரிழந்தவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) இவர்கள் உயிரிழந்த விதம் யாதென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு நபரும் உயிரிழந்த இடங்கள் யாவையென்பதையும்;

(v) கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக காணப்படும் குற்றச்சாட்டுகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2596/ '12

6\.

கௌரவ சஜித் பிரேமதாச,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 – 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து தொழில்வாய்ப்புக்காக வெளிநாடு சென்றுள்ள பெண்களின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி தொழில்வாய்ப்புக்காக வெளிநாடு சென்றுள்ள பெண்களின் எண்ணிக்கை, மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் தொழில்வாய்ப்புக்காக வெளிநாடு சென்றுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கையின் சதவீதமாக தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி பெண்கள் எவ்வாறான தொழில்வாய்ப்புகளுக்காக வெளிநாடு சென்றுள்ளனர் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புக்காக சென்றுள்ள பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அமுல்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(ii) எதிர்காலத்தில் மேற்படி வேலைத்திட்டத்தை மென்மேலும் முறைசார்ந்ததாகவும் பலம்மிக்கதாகவும் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அதனை மேற்கொள்ளும் முறை யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3015/ '12

7\.

கௌரவ புத்திக பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய சேமிப்பு வங்கியில் அலுவலக உதவியாளர்கள், தட்டெழுத்தாளர்கள், சாரதிகள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள் ஆகிய பதவிகளுக்கு வெளிவாரி தொழில் வழங்கும் நிறுவனமொன்றின் மூலமாக ஆட்சேர்ப்பு நடைபெறுகின்றதா என்பதையும்;

(ii) மேற்படி ஊழியர்களை நிரந்தர சேவைக்கு ஆட்சேர்க்காதிருப்பதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) தற்போதைய வாழ்க்கை நிலையினை கருத்திற் கொள்ளும் போது மேற்படி ஊழியர்களுக்கு மிகக் குறைந்த சம்பளமே வழங்கப்படுகின்றதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி ஊழியர்களை தேசிய சேமிப்பு வங்கியின் நிரந்தர சேவைக்கு உள்ளீர்த்து இவர்களின் தொழில்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எத்தேதியில் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3114/ '12

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 சனவரி மாதத்திலிருந்து புத்தளம் மாவட்டத்திலுள்ள சில காணிகள் அரசியல்வாதிகளாலும் அரசியல் ரீதியாகத் தொடர்புடைய அலுவலர்களாலும் பலவந்தமாக எடுக்கப்பட்டிருப்பது பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010ஆம் ஆண்டிலிருந்து புத்தளம் மாவட்டத்தில் உடைமை மாற்றப்பட்டிருக்கின்ற, குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்ற மற்றும் அனுமதிப் பத்திரம் அல்லது 'சுவர்ணபூமி' உறுதிகளின் பிரகாரம் பராதீனப்படுத்தப்பட்டிருக்கின்ற அரசாங்கக் காணிகளின் பெயர்கள், ஏக்கர் அளவுகள், பெறுமதிகள் ஆகியவற்றை காணி வாரியாக யாதென்பதையும்;

(ii) மேற்சொன்ன காணிகளை மாற்றிக்கொடுத்தல் அல்லது ஒப்படைத்தல் மற்றும் அதில் கேள்விப்பத்திர நடைமுறைகளைப் பின்பற்றாமை ஆகியவற்றுக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் பல தசாப்த காலங்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கும் ஏனையோருக்கும் மேற்படி காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புகள் அல்லது வசதிகள் வழங்கப்பட்டிருக்கின்றனவா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) பயங்கரவாதிகளின் உடைமையாக இருந்த பகுதிகளைச் சுத்திகரித்தல் எனும் பெயரில் புத்தளம் மாவட்டத்திலுள்ள கடற்கரைக் காணிகளைச் சட்டரீதியான உரிமையாளர்களிடமிருந்து பலவந்தமாக அல்லது வலுக்கட்டாயத்துடன் சுவீகரித்தல் தொடர்பான சார்த்துரை உண்மையானதா என்பதையும்;

(ii) இன்றேல், அத்தகைய சார்த்துரை எவ்வாறு எழுகின்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3361/ '12

9.

கௌரவ பி. ஹரிசன்,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் அரசாங்க வாகனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் உள்ள வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் சொந்த வாகனங்களை வேறுபடுத்தி இனம் காண்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இது தொடர்பில் விளக்கமளிப்பாரா என்பதையும்;

(iii) அமைச்சுக்கும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் சொந்தமான அரசாங்க வாகனங்களில் அரச இலச்சினையுடன் குறித்த நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3694/ '13

10.

கௌரவ அனுர திசாநாயக்க,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச மரக் கூட்டுத்தாபனத்தின் மூலம் 2013.03.06 ஆம் திகதியன்று ரிவிர பத்திரிகையில் விளம்பரமொன்று பிரசுரிக்கப்பட்டதா என்பதையும்;

(ii) மேற்படி விளம்பரம் பிரசுரிக்கப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்;

(iii) மேற்படி விளம்பரத்துக்கு அரச மரக் கூட்டுத்தாபனத்தினால் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பணத் தொகை எந்த செலவுத் தலைப்பின் கீழ் செலவிடப்பட்டதென்பதையும்;

(v) ஏதேனுமொரு அரசியல் கட்சியின், ஏதேனுமொரு பதவிக்கு எவரேனுமொரு நபர் நியமிக்கப்படும் போது அதற்கேற்புடையதாக அரச மரக் கூட்டுத்தாபனத்தினால் விளம்பரங்களை பிரசுரிக்க முடியுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2598/ '12

11.

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது அரசாங்கப் பாடசாலைகளில் ஆங்கில மொழி ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை நிலவுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், ஆங்கில மொழி ஆசிரியர்களுக்கு நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) ஆங்கில மொழி ஆசிரியர் பற்றாக்குறையைத் தவிர்ப்பதற்காக ஏற்கனவே மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உயர் மட்டத்தில் ஆங்கில மொழி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள ஏற்பாடுகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஏற்பாடுகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆங்கில மொழிப் பயிற்சியை பெற்றுக் கொடுக்கப் போதுமானதாக உள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3016/ '12

12.

கௌரவ புத்திக பதிரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பின்லாந்து அரசின் நன்கொடையாகிய இலங்கை தேசிய வைத்தியசாலையின் திடீர் விபத்துப் பிரிவின் பெறுமதி மற்றும் முக்கியத்துவம் கருதி ஆரம்பம் முதல் இதற்கென தனியான பராமரிப்புப் பிரிவொன்று தாபிக்கப்பட்டதென்பதையும்;

(ii) தேசிய வைத்தியசாலையின் திடீர் விபத்துப் பிரிவின் ஒழுங்கற்ற நிர்வாகத்தின் காரணமாக மேற்படி பராமரிப்புப் பிரிவு தற்போது செயலிழந்துள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) செயலிழந்துள்ள திடீர் விபத்துப் பிரிவின் பராமரிப்புப் பிரிவை துரிதமாக இயங்கும் நிலைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3115/ '12

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 சனவரி மாதத்திலிருந்து மன்னார் மாவட்டத்திலுள்ள சில காணிகள் அரசியல்வாதிகளாலும் அரசியல் ரீதியாகத் தொடர்புடைய அலுவலர்களாலும் பலவந்தமாக எடுக்கப்பட்டிருப்பது பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010ஆம் ஆண்டிலிருந்து மன்னார் மாவட்டத்தில் உடைமை மாற்றப்பட்டிருக்கின்ற, குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்ற மற்றும் அனுமதிப் பத்திரம் அல்லது 'சுவர்ணபூமி' உறுதிகளின் பிரகாரம் பராதீனப்படுத்தப்பட்டிருக்கின்ற அரசாங்கக் காணிகளின் பெயர்கள், ஏக்கர் அளவுகள், பெறுமதிகள் ஆகியன காணி வாரியாக யாவையென்பதையும்;

(ii) மேற்சொன்ன காணிகளை மாற்றிக்கொடுத்தல் அல்லது ஒப்படைத்தல் மற்றும் அதில் கேள்விப்பத்திர நடைமுறைகளைப் பின்பற்றாமை ஆகியவற்றுக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் பல தசாப்த காலங்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கும் ஏனையோருக்கும் மேற்படி காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புகள் அல்லது வசதிகள் வழங்கப்பட்டிருக்கின்றனவா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) பயங்கரவாதிகளின் உடைமையாக இருந்த பகுதிகளைச் சுத்திகரித்தல் எனும் பெயரில் மன்னார் மாவட்டத்திலுள்ள கடற்கரைக் காணிகளைச் சட்டரீதியான உரிமையாளர்களிடமிருந்து பலவந்தமாக அல்லது வலுக்கட்டாயத்துடன் சுவீகரித்தல் தொடர்பான சார்த்துரை உண்மையானதா என்பதையும்;

(ii) இன்றேல், அத்தகைய சார்த்துரை எவ்வாறு எழுகின்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 6.00 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 3.

இலங்கை கொள்கைக் கற்கைகள் நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கிழ், நிதி, திட்டமிடல் அமைச்சரிடம் கலந்துரையாடி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2013 செத்தெம்பர் 23 ஆம் திகதி 1829/23 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கிழ், நிதி, திட்டமிடல் அமைச்சரிடம் கலந்துரையாடி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2013 செத்தெம்பர் 23 ஆம் திகதி 1829/24 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடனும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) உப பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2013 மாச்சு 01 ஆம் திகதிய 1799/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— "2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 13.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

14.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

15.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

16.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

17.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

18.

மைத்திரிபால சேனாநாயக்க மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

19.

ஹேண்ட்ஸ் பொ எடியுகேஷன் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.